

பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க நகர் மண்டலம் வார்டு 76க்குட்பட்ட அங்காளம்மன் கோவில் தெருவில் மழைநீரை முழுவதுமாக அகற்றப்பட்ட பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு வட்டாரம்) , எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்திய வட்டாரம்) மண்டலக்குழுத் தலைவர்கள் சரிதா மகேஷ்குமார்,பி.கே.மூர்த்தி உட்பட பலர் இருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில், ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள, அவசர கால விபத்து பகுதி கட்டடப் பணிக்கு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் (19.06.2023) அடிக்கல் நாட்டி, தாய்மார்களுக்கு குழந்தை நல பரிசு பெட்டகத்தினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் டாக்டர்.ஏ.சண்முககனி, எம்.எம்.அப்துல்லா எம்.பி., முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், செயற் பொறியாளர் (பொ.ப.து.) வெ.சுகுமாரன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்காதவாறு - முதல்வரின் அறிவுரையேற்று

# சென்னையில் போர்க்கால அடிப்படையில் பல்வேறு நிவாரணப் பணிகள்!

## பருவ மழை முன்னெச்சரிக்கை ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 21-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர் மற்றும் அண்ணாநகர் ஆகிய மண்டலங்களில் தென்மேற்குப் பருவ மழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் (19.06.2023) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது:-

முதலைமைச்சர் அவர்கள் திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறப்பு விழா நிகழ்ச்சியில் இருந்தாலும் சென்னைப் பெருநகரில் பெய்த மழையினால் மக்களின் இயல்பு வாழ்வை எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நேற்றைய தினம் அமைச்சர்கள், அதிகாரிகள் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து கை பேசியில் தொடர்பு கொண்டு எங்கெல்லாம் மழைநீர் தேங்கி நிற்கின்றதோ மக்களுக்கு எந்த வகையிலும் இடையூறு ஏற்படாமல் இயல்பான வாழ்க்கைக்கு மக்கள் திரும்ப கூடிய அளவிற்கு போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த வகையிலே நேற்று இரவிலிருந்து பெய்த மழை ஒட்டுமொத்தமாக சென்னையிலே 10.03 செ.மீ மழை தேங்கிருந்தாலும் நுங்கம்பாக்கம், ஆலந்தூர் போன்ற பகுதிகளில் 16 செ.மீ அளவிற்கு மழை பதிவாகியுள்ளது.

அதேபோல் மீனம்பாக்கத்தில் 17.03 செம மீ அளவிற்கு மழை பதிவாகி இருக்கும் நிலையில் 11 மணிக்கு எல்லாம் இயல்பு வாழ்க்கை மக்கள் திரும்பி இருக்கின்ற போர்க்கால அடிப்படை நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியும் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியமும் இணைந்து நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

சென்னையில் இருக்கின்ற ஒட்டுமொத்த 21 சுரங்க பாதையில் 16 மாநகராட்சி வசம் இருந்தாலும் கணேசபுரம் சுரங்கப் பாதை மட்டும் தான் காலையிலே போக்குவரத்து நிறுத்தம் தண்ணீர் தேங்கி இருந்தது. அதுவும் 11 மணி அளவில் சுரங்கப் பாதையில் தண்ணீர் முழுமையாக அகற்றப்பட்டு இயல்பான போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாநகரை பொறுத்தவரையில் ஒட்டு மொத்தமாக கடந்த 2021 ஆம் ஆண்டு பெய்த மழையின் போது தேங்கி இருந்த பல்வேறு இடங்களில் தண்ணீர் 2022 ஆம் ஆண்டு இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதேபோல் 2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெய்திருக்கின்ற மழை 27 ஆண்டுகளுக்குப் பிறகு பெருமழை ஒரே நாளில் பெய்ததாக வானிலை பதிவிட்டு இருக்கின்றது. இருந்தாலும் அதை சமாளிக்கக் கூடிய அளவிற்கு இந்த இடைப்பட்ட ஆறு மாத காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக பல இடங்களில் தண்ணீர் தேங்கவில்லை குறிப்பாக குளத்தூர் பகுதியில் 70 அடி சாலை ஜவகர் நகர் செல்வி நகர் தில்லை நகர் போன்ற இடங்களில் ஒரு சொட்டு தண்ணீர் கூட தேங்கவில்லை அதேபோல் தினத்தந்தி நாளிதழ் அமைந்திருக்கின்ற அந்தப் பகுதியிலும் தண்ணீர் தேங்கவில்லை இவைகள் ஆறு மாத காலத்தில் பணியின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டதும் நாம் கண்கூடாக இன்றைக்கு காண முடிகிறது.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் 2022-23 ஆம் ஆண்டு 1154 கிலோ மீட்டர் அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 800 கிலோமீட்டர் அளவிற்கு பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. மீதமுள்ள 354 கிலோ மீட்டர் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இவைகளின் மதிப்பு 1520 கோடி ரூபாய் இந்த பணிகளின் அனைத்தும் வருகின்ற பருவ மழைக்கு முன்னதாக பணிகள் நிறைவுறும் வகையில் திட்டமிட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

புதிதாக 70 கிலோ மீட்டர் அளவிற்கு பணிகள் இப்பொழுது மேற்கொள்ளபட்டிருக்கின்றன. இந்த 70 கிலோ மீட்டர் அளவிற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த பணிகளின் மதிப்பு 250 கோடி ரூபாய் இந்தப் பணிகளும் பருவ மழைக்கு முன்பாக பூர்த்தி செய்வதற்கு உண்டான திட்டமிடல் தொடங்கி இருக்கின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்த மழையில் 30 இடங்களில் சுமார் 6 மரங்கள் பெரிய அளவிலும் 24 சிறிய அளவிலும் மரங்கள் முடிந்து விழுந்தது உடனடியாக அவைகள் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரமை க்கப்பட்டுள்ளது. அதேபோல் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது இருக்கின்ற நிலையில் 3,200 பணியாளர்கள் இந்த வெள்ள நிவாரண பணியை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த மழையால் மக்கள் எந்தவித பாதிப்புக்கு உள்ளாகாமல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டு வருகிறது.

பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தினுடைய பணிகளை எடுத்துக் கொண்டால் சுமார் 1530 இடங்களில் இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன. அதேபோல் 2000 அளவில் போதிய பணியாளர்கள் களத்தினில் நின்று பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். 330 கழிவுநீர் அகற்றும் நிலையங்களில் முழுமையாக Storage pumping station நிலையில் உள்ளன. 250 ஜெனரேட்டர்கள் கைவசம் தயார் நிலையில் இருக்கின்றது.மின்சார பகுதிகளில் ஏதாவது ஏற்பட்டால் அந்த இடங்களில் ஜெனரேட்டரைப் பயன்படுத்தி கழிவு நீரையும் மழைநீரையும் வெளியேற்றுவதற்கு உண்டான பணிகளையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 2,260 பணியாளர்கள் 20 பிரிவுகளாகப் பிரிந்து சுமார் 138 இடங்களில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒட்டுமொத்தமாக விழும் மரங்கள் அகற்றப்படுவதற்கு 6 சக்தி மின் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.200 மினி மரங்களை வெட்டுகின்ற கருவிகள் பயன்படுத்துவதற்கு உண்டான ஆட்களோடு தயார் நிலையில் உள்ளன.

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் 24மணி நேரமும் ரிப்பன் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அதில் புகார்கள் பெறப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் கம்ப்ளைண்ட் சென்டர் 1913 லைன்களைக் கொண்ட கம்ப்ளைண்ட் செல்லும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படி ஒட்டுமொத்தமாக போர்க்கால அடிப்படையில் பெருமழை வெள்ளம் வந்தால் எப்படி முழுவதுமாக அரசு இயந்திரம் செயல்படுமோ அந்த வகையில் அரசு இயந்திரத்தை முடித்துவிட்டு மக்கள் பாதிப்படையாத வகையில் பெருமழை வந்தாலும் பாதுகாக்கின்ற நடவடிக்கையிலேயே முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சியும் தமிழ்நாடு மின்சார வாரியமும், பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியமும் இணைந்து துரித பணியிலே தங்களை முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. மக்களும் இந்த துரித பணியை பாராட்டுகிறார்கள் நேற்று இரவிலிருந்து பெய்த மழை காலையில் ஒரு 2 மணி நேரம் நேரத்தில் முழுமையாக இயல்பு வாழ்க்கை திரும்பியதை மக்களும் மகிழ்ச்சியோடு வரவேற்றுக் கொண்டு இருக்கின்றார்கள்

நாளைய தினம் இன்று பெய்த மழையினால் பல தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியுள்ள காரணத்தினால் பொதுமக்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படும் எனவே தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவ முகாம் நடத்த அறிவுறுத்தி உள்ளார்கள் அதன் அடிப்படையில் எங்கெல்லாம் மருத்துவ முகாம்கள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் கொளத்தூர் பகுதியில் நானும் பொறுப்பு ஆணையரும் இந்த மருத்துவ முகாமை தொடங்கி வைக்க உள்ளோம் என தெரிவித்தார். தொடர்ந்து அமைச்சர் அவர்கள் ரிப்பன் கட்டடத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, திரு.வி.க. நகர் மண்டலத்திற்க்குட்பட்ட அங்காளம்மன் கோவில் தெருவில் மழை நீரை முழுவதும் அகற்றப்பட்ட நிலையை பார்வையிட்டார், தொடர்ந்து கணேசபுரம் சுரங்கப்பாதை சீர் செய்யப்பட்ட பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

உடன் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., இணை ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையாளர்கள் விஷு மஹாஜன், (வருவாய் (ம) நிதி) அவர்கள், எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு வட்டாரம்), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்திய வட்டாரம்), நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் நேதாஜி யு.கணேசன், பி.ஸ்ரீராமுலு, திருமதி சரிதா மகேஷ்குமார், பி.கே. மூர்த்தி, கூ.பி.ஜெயின், தலைமைப் பொறியாளர், மண்டல அலுவலர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.





ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட பரணிபுத்தூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.36.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பள்ளி வகுப்பறை கட்டிடத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ. மனோகரன், ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி, துணைத் தலைவர் உமா மகேஸ்வரி மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

# திருவொற்றியூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூன் 21-

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வட்ட கழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடியேற்றி,ஏழை எளியோர் 500 பேருக்கு பிரியாணி மற்றும் இனிப்பு ஐஸ் கிரீம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழகத் தோழர்களுக்கு கருப்பு சிவப்பு துண்டு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மு.செல்வம், ந.தட்சிணாமூர்த்தி, கே.எஸ். ஆனந்தன், ஜெ.கருணாநிதி, செ.முரளிதரன, கே.பிரபாவதி, த.கதிரவன், எஸ்.முத்துராஜ், ஜெ.சுந்தரம், பி.ராமராஜ், எஸ்.யோகானந்தம், வி.சி.சூர்யா, ம.ரஞ்சித்குமார், டி.இ.பரணிகுமார் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனுஆதி

**ஜூன் 21 (2005)**



தாம்பரம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

நகர்மன்றத் தலைவராக, தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### திருக்கோயில்களில் இனிமேல் யானைகள் வாங்கக்கூடாது என்ற

# தனி நீதிபதியின் உத்தரவுக்கு தடை!

## தமிழ்நாடு அரசின் மேல்முறையீட்டில் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூன் 21-

திருக்கோயில்களில் இனிமேல் யானைகள் வாங்கக் கூடாது என அனைத்து திருக்கோயில்களுக்கும் அறிவுறுத்தும்படி அறநிலையத்துறை அரசு செயலருக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களால் 27.02.2023 அன்று உத்தரவிடப்பட்டது.

அதனை எதிர்த்து தமிழ்நாடு அரசால் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு நேற்று முன்தினம் (19.06.2023) சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் திருமதி விக்டோரியா கௌரி ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றதில் தனி நீதிபதி உத்தரவிற்கு இடைக்காலத் தடை வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எல். பலராமன்

**ஜூன் 21 (2020)**



தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்

வடசென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் என படிப்படியாக உயர்ந்து மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் ஆட்சியில் இருந்தபோதும் – எதிர்க்கட்சியாக இருந்தபோதும், வடசென்னையில் கழகம் வளர பாடுபட்டவர். வடசென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோர்களை கொண்டு பல பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக பணியாற்றியவர்.

“இவர் பலராமன் அல்ல; ‘பலே ராமன்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“கழகப் பணிகள் அனைத்தையும் அமைதியாக, அவர் என்ன மாதிரிப் பணியாற்றுகிறார் என்றே தெரியாத அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு, அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்.” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.